**முதன்மை மாவட்ட நீதிமன்றம், இராமநாதபுரம்.**

**சாட்சிகளின் வாக்குமூலம்**

**(அத்தியாயம் XXIII குற்றவியல் விசாரணை முறை சட்டம்)**

**அமர்வு வழக்கு எண். : 104/2022**

**நாள்: 24.09.2025**

**அரசு தரப்பு சாட்சி** : 11 (LW16)

2025ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 24ம் நாள் சாட்சியின் வாக்குமூலம் 1873ம் வருடத்திய சட்டம் பிரிவு 10ன்படி சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சௌந்தர்ராஜன் | ஜாதி | |
| தந்தை பெயர் | | தொழில் | |
| கிராமம் | | சமயம் | |
| தாலுகா | | வயது | |

( A2, A3, A4, A6, A7 ஆஜர். A1, A5 ஆஜர் இல்லை. குவிமுச பிரிவு 317ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு ஏற்கப்பட்டது. )

<u>முதன்மை விசாரணை:</u>

நான் கீழநரியன் கிராமத்தில் குடியிருந்து, டிரைவர் வேலை செய்து வருகிறேன். சாட்சிகள் தங்கபாண்டியன், கனிராஜசேகரன் ஆகியோர் எனது அண்ணன்கள். சாட்சி அலெக்ஸ் பாண்டியனை தெரியும். இறந்துபோன கருப்பையாவை எனக்குத் தெரியும். கடந்த 5 வருடத்திற்கு முன்னர் சாயல்குடி அருகே உள்ள எனது மாமனார் ஊரான வாழும்பட்டி கிராமத்தில் இருந்த போது சாட்சி அலெக்ஸ் எனக்கு போன் செய்து, கருப்பையாவின் பைக் கீழநரியன் பஸ் ஸ்டாப் அருகே கிடப்பதாக சொன்னார். நான் எனது அண்ணன் கனிராஜசேகரனுக்கு போன் செய்து, கருப்பையா நமது வீட்டிற்கு வந்தவர், சென்றுவிட்டாரா என்று கேட்டேன். அவர் இரவே சென்றுவிட்டதாக எனது



MEHBUB ALI KHAN A K
Digitally signed by MEHBUB ALI KHAN A K
Date: 2025.09.24 15:49:07 +0530

அண்ணன் எனக்கு தகவல் சொன்னார். இந்த தகவலை மட்டும் போலிசார் என்னை விசாரித்தபோது நான் சொன்னேன்.

அரசு தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளின்படி மேற்சொன்ன சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய Sec.154 of Indian Evidence Act ன் படி அனுமதி கேட்டு அனுமதி வழங்கப்பட்டது.

<u>அரசுத்தரப்பு குறுக்கு விசாரணை</u>

கடந்த 30.07.2021ம் தேதி காலை 05.30 மணிக்கு நான் கருப்பையா மனைவி வளர்மதிக்கு போன் செய்து, கருப்பையா எங்கே எனக்கேட்டதாகவும், அதற்கு வளர்மதி, கருப்பையா உங்கள் வீட்டில்தான் இருக்கிறார் என்று சொன்னதாகவும், நான் சாயல்குடி வந்துவிட்டேன் என சொல்லி, வீட்டில் கேட்டு சொல்கிறேன் என சொல்லி வைத்ததாகவும், பிறகு எனது அண்ணனுக்கு நான் போன் செய்து, கருப்பையா நம்ம வீட்டில் இருக்கிறாரா என்று கேட்டேன் என்றும், அதற்கு என் அண்ணன் முதல்நாள் இரவே கருப்பையா நம்ம வீட்டிற்கு வந்துவிட்டு, இரவே வீட்டிற்கு சென்றுவிட்டார் என்று சொன்னார் என்றும், உடனடியாக நான் வளர்மதிக்கு போன் செய்து, கருப்பையா முதல் நாள் இரவே எங்கள் வீட்டை விட்டு போய்விட்டார் என்று சொல்லவும், வளர்மதியும் அவரது குழந்தைகளும் 30.07.2021ம் தேதி காலை 06.30 மணியளவில் கருப்பையாவை தேடி சென்ற போது, கீழநரியன் பஸ் ஸ்டாப் அருகே கருப்பையாவின் Hero Splender Plus பைக் முன்பகுதி உடைந்து இரத்தக்கரை படிந்த நிலையில் கிடந்தது என்றும், இதனை பார்த்த வளர்மதி பஸ் ஸ்டாப்பை சுற்றி தேடிய போது கீழநரியன் பஸ் ஸ்டாப் கிழக்குப்புறம் கருப்பையா கொலை செய்யப்பட்டு கிடந்துள்ளார் என்றும், பின்னர் எனது அண்ணன் கனிராஜனிடம் நான் நடந்த விவரம் கூறி விசாரித்ததில், கருப்பையா புதியதாக கட்டிவரும் வீட்டிற்கு ஜல்லி வாங்குவதற்காக எனது அண்ணன் கனிராஜனிடம்



MEHBUB ALI KHAN A K
Digitally signed by MEHBUB ALI KHAN A K
Date: 2025.09.24 15:49:09 +0530

ஜல்லிக்கு அட்வான்ஸ் கொடுக்க வீட்டிற்கு வந்தார் என்றும், வரும் வழியில் இரவு சுமார் 08.00 மணியளவில் எங்கள் ஊர் கொடிக்கம்பத்தில் ரமேஷ்குமார், சுரேஷ்குமார், ராஜ்குமார், சரத்குமார், தமிழரசன், கார்த்திகைசாமி, ரஞ்சித், பெரியசாமி, ரகுபதிபாண்டி, கணபதிபாண்டி, முத்துராஜ், காளிதாஸ் ஆகியோர்கள் உட்கார்ந்து இருந்துள்ளதாகவும், அவர்கள் தங்கப்பாண்டியனையும், கருப்பையாவையும் பார்த்துள்ளதாகவும், ஏற்கனவே கருப்பையாவின் ஊரை சேர்ந்த காளீஸ்வரி என்பவரை ரமேஷ்குமார் கையை பிடித்து இழுத்த சம்பவத்தில் முன்விரோதம் இருந்த காரணத்தினாலும், கருப்பையா அதிகமான குடிபோதையில் இருந்த காரணத்தினாலும் நான் வீட்டிற்கு போக வேண்டாம் என தடுத்தேன் என்றும், ஆனால் கருப்பையா வீட்டிற்கு செல்ல வேண்டும் என சொல்லிக்கொண்டிருந்தார் என்றும், இரவு 08.00 மணிக்கு மேல் ஆகியும் வீட்டிற்கு வராததால் அவரது மனைவி வளர்மதி எனது அண்ணன் கனிராஜனுக்கு போன் செய்து கேட்டதாகவும், அதற்கு கருப்பையா தற்போது வீட்டிற்கு செல்ல வேண்டும் என கூறிவருவதாகவும் சொல்லியுள்ளார் என்றும், ஆனால் எனது அண்ணன் சொன்னதை கேட்காமல் கருப்பையா பைக்கில் வீட்டிற்கு கிளம்பி சென்றதாகவும், அப்போதுதான் இந்த கொலை சம்பவம் நடந்ததாகவும் எனது சகோதரர் சொல்லி நான் கேள்விப்பட்டதாக நான் போலிசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல.

ஆஜர் எதிரிகள் எனது ஊரை சேர்ந்தவர்கள் என்பதால், அவர்களை இந்த வழக்கிலிருந்து காப்பாற்ற உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>** – இல்லை.

**<u>மறு விசாரணை</u>** – இல்லை.

MEHBUB ALI KHAN A K
Digitally signed by MEHBUB ALI KHAN A K
Date: 2025.09.24 15:49:13 +0530

முதன்மை அமர்வு நீதிபதி ,
இராமநாதபுரம் .